Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 2, Special Issue - 1, October 2022 E-ISSN: 2583-0481

# Bharathi's Devotion on Kannan - A View

**Dr. R. Anto Pio Ezhil,** Assistant Professor of Tamil, Pope's College, Sayerpuram,
Affiliated with Manonmaniam Sundaranar University, Tamilnadu, India
**ORCiD: https://orcid.org/0000-0003-1604-3876**
**DOI: 10.5281/zenodo.7312447**

## Abstract

*Bharathiyar is the forerunner of modern poems in Tamil. He had been the poet laureate of Ettayapuram Jaminin Thoothukudi District (Ettayyapurathu Aasthanakavi). He is praised as the Great Bard ("Mahakavi") of Tamil Nadu. His poems are revolutionary. Being a poet, he is also a culture minded person. He was very passionate in his contribution for the independence of India. He is also a archetype setter in Tamil poetry and had written many poems in praise of Kannan or Krishna, the incarnation of Lord Vishnu. This article speaks of the poems he composed in praise of Lord Krishna. Lord Krishna as the protector, dutiful god, naughty Child and the preserver God which had been written by Bharathiyar.*

**Keywords:** Bharathi, Aspiration, Devotion, Krishna.

## References

[1] Kareem, Abdul. "Bharathiyar Ulaga Kavi", Vanathi Publishers.
[2] "Bharathiyar Kavithigal" Pari Nilayam, Chennai Ed-3, Vanathi Publishers.
[3] Thirunavukarasar "Bharathiyar Katturaikal" Page.3-6, Vanathi Publishers.
[4] "Bharathiyar Kavithigal" Mercury Book Company, Coimbatore.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# கண்ணன் மேல் பாரதி கொண்ட பக்தி நெறி –ஓர் பார்வை

**முனைவர் இரா. ஆன்றோ பியோ எழில்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,போப் கல்லூரி, சாயர்புரம்,
திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-1604-3876**
**DOI: 10.5281/zenodo.7312447**

**ஆய்வுச்சுருக்கம்**

*புதுக்கவிதையின் முன்னோடி பாரதியார். இவர் எட்டையாபுரத்து ஆஸ்தானகவி, மகாகவி என்றெல்லாம் புகழப்படுகின்றார். இவர் பாடல் எழுச்சியூட்டுவன. இவர் கவிஞர் மட்டும் அல்லாது சமயத்தின் மேல் அதீத நம்பிக்கைக் கொண்டவர். இவர் வீரசுதந்திர இந்தியாவின் விடிவெள்ளி. இவர் கண்ணன் மேல் அதீத பக்தி, நம்பிக்கையும், தோழைமையும் கொண்டு பாடும் கண்ணன் பாட்டை ஆய்வாளர் தன் கட்டுரையில் விவரித்துள்ளார். பாரதி கண்ணனை சேவகனாகவும், கண்ணனை பிள்ளையாகவும் ஆழ்வார்களின் முழு முதற்கடவுளாகவும் கண்ணனை வியந்து பாடும் விதத்தை பாரதியார் பாடலின் வழியாக ஆய்வாளர் இக்கட்டுரையில் இனிமையுர விவரித்துக்கூறியுள்ளார்.*

**திறவுச்சொற்கள்:** கண்ணன், பாரதி, பக்தி நெறி, பார்வை.

## முன்னுரை

எட்டையபுரத்து ஆஸ்தான கவி, மாசற்ற நேசகவி, இந்தியாவின் இன்பகவிபாரதி, தமிழைத் தாங்கியவன் பாரதி, தமிழின் துயரத்தை தூய தமிழோன் பாரதி. பக்தி இலக்கியத்தில் தமிழகத்தில் சுமார் 7ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு வளர்ச்சி கண்டது. சைவமும், வைணவமும் மக்கள் மனதில் பக்தியின் பயன், பக்தியின் பயம், பக்தியின் உன்னத இன்புறச் செய்தது. கடவுளுக்குள்ளே கரைந்தவன் பாரதி. தன் உள்ளக் குமுறல்களைப் பக்தியின் பால் வெளிப்படுத்தி வீரசுந்திர இந்தியாவின் விடிவெள்ளி கவிஞர் பாரதி. இக்கட்டுரையில் பாரதி கண்ணன் மேல் கொண்ட அளாவிதமான அன்பை இந்தக் கட்டுரையில் காணலாம்.

## பாரதியின் பக்தி நெறி

பாரதி “கண்ணன் பாட்டு” பாடியதற்கு ஒரு காரணமுண்டு. பக்தி நெறியிலே சிறந்து விளங்க “கண்ணன் பாட்டினைத்” தந்தார். எந்தத் தொழில் செய்து பிழைத்தாலும் தெய்வ பக்தி இருந்தால் இகத்தில் மேன்மையும், பரத்திலே மோட்சமும் உண்டு என்பது அவர் கூற்று. எனவே மக்கள் மத்தியில் தெய்வ பக்தியை ஊட்டுவதற்காகவே “கண்ணன் பாட்டினை” எழுதினார்.

## பாரதியின் கண்ணன் பாட்டு

பாரதியார் கண்ணன் படைத்த கீதையில் ஈடுபாடுள்ளவர். பகவத் கீதைக்கு விளக்கவுரை எழுதியவர்.

**...நல்ல**

**கீதையுரைத்தெனை இன்புறச் செய்தவன்**

**கீர்த்திகள் வாழ்த்திடுவேன்**

என்று கண்ணனை கண்ணன் என் தோழன் என்ற பகுதியில் கீதையின் பெருமையைப் பாடியுள்ளார்.

**கண்ணன் பாட்டில் இனிமை**

ஆழ்வார்கள் எங்கும் எதிலும் கண்ணனையே கண்டவர்கள். அதை போலவே பாரதியும் காணும் திசை எங்கும் கண்ணனைக் கண்டவர். மண்ணில் உள்ள எல்லா உயிர்களிலும் கண்ணன் நிறைந்திருக்கிறான் என்பதை,

**எல்லா உயிர்களிலும் நானேயிருக்கிறேன்**

**என்று ரைத்தான் கண்ணபெருமான்**

என்று உரைத்த பாரதியார். தன்னுடைய கண்ணன் பாட்டில் கண்ணனை பல்வேறு உறவுமுறைகளிலே பார்க்கின்றார். தோழன், தாய், தந்தை, சேவகன், சீடன், சற்குரு, காதலன், காதலி, விளையாட்டு பிள்ளை, ஆண்டான், குலதெய்வம் ஆகிய பல கோணங்களில் கண்ணனைக் காண்கிறார்.

**கண்ணனை நண்பனாகப் பாவித்தல்**

கண்ணனின் மேல் ஆழமான நட்பை பாரதியார் வெளிப்படுத்துகிறார்.

**பொன்னவிர் மேனிச் சுபத்திரைமாதைப்**

**புறங்கொண்டு போவதற்கே – இனி**

**என்ன வழியென்று கேட்கில், உபாயம்**

**இரு கணத்தே உரைப்பான்**

இப்பாடல் மூலம் கண்ணன் கேட்டபொழுதில் கேட்ட பொருள் கொடுப்பான். மருந்து கொடுப்பான். உதவி செய்வான், அப்படிபட்ட நண்பனாகிய கண்ணனை இழக்கத் தயாராயில்லை. அவன் இல்லையெனில் சகத்தினில் எனக்கு வாழ்வேயில்லை என்கிறார் பாரதியார்.

**கண்ணன் சேவகன்**

ஒரு லட்சிய சேவகன் எப்படி இருக்க வேண்டுமென்பதை விளக்கிக் காட்டுகிறது. தன் சேவகனாகக் கண்ணனே வந்து ஆட்கொண்ட செய்தியை பாரதியார்.

**நண்பனாய், மந்திரியாய், நல்லா சீரியனுமாய்**

**பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்**

**எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதியென்று சொன்னான்**

**இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்து விட்டேன்!**

என்று மகிழ்கிறார். கண்ணனை பணியாளனாகப் பெற்றதற்காக, அவன் கால் வைத்த நேரம் செல்வம், இளமை, சிறப்பு, கீர்த்தி, கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம் ஆகிய அனைத்து

நலனும் பெருகிவிட்டது! கண்ணன் அவரை ஆட்கொண்டும் விட்டார். கண்ணனை சேவகனாக்கியது. தொழிலால் உயர்வு தாழ்வு இல்லை செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்தை வலியுறுத்தவே.

**கண்ணனை குழந்தையாகப் பாவித்தல்**

கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து பாடிய "கண்ணம்மா என் குழந்தை" என்ற பகுதி மிகவும் இனிமையானது. பாரதியின் குழந்தைப் பாடல்கள் தனிச்சிறப்பு மிக்கவை.

**சின்னஞ்சிறு கிளியே – கண்ணம்மா!**
**செல்வக் களஞ்சியமே!**
**பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா!**
**பேசும் பொற் சித்திரமே!**

என்றெல்லாம் அழைக்கும் போது அமுதம் ஊறுகிறது. இப்பாடலில் எளிமையும் இனிமையும் கலந்து நலம் பாடப்பாடியுள்ளார். இவையெல்லாம் பாரதியின் கற்பனைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

**ஆயர் பாடி மக்களின் துயர் போக்கும் கண்ணன்**

ஆயர்குலத்தில் தோன்றிய கண்ணன் தனது விளையாட்டுகள் பலவற்றை நிகழ்த்துகிறான். ஆயர்பாடி மக்களின் துயரினைப் போக்கிப் பாதுகாப்பளிக்கின்றான். பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டு இவ்வுலக உயிர்களைக் காப்பவன் கண்ணன். காயின் புளிப்பாகவும், கனியின் சுவையாகவும், காற்றின் குளிர்ச்சியாகவும், நெருப்பின் வெம்மையாகவும், சேற்றில் குழம்பாகவும், திசைகளின் விளக்கமாகவும் இருப்பவன் இடையர்குலத்தில் பிறந்த கண்ணன் என்பதைப் பாரதி.

**காற்றிலே குளிர்ந்த தென்னே?**
**கண்ண பெருமானே! – நீ**
**கனலிலே சுடுவதென்னே?**
**கண்ண பெருமானே!**
**சேற்றிலே குழம்பலென்னே!**
**கண்ண பெருமானே! – நீ**
**திக்கிலே தெளிந்த தென்னே?**
**கண்ண பெருமானே**

என்று பாரதியார் கண்ணன் பெருமையினைப் பாடிச் சிறப்பிக்கின்றார்.

**முடிவுரை**

சமயப்புலவர்களின் வரிசையிலே பாரதியை இடம் பெறச் செய்ததற்கு பாரதியில் எழுதுத்திறனே காரணம் ஆகும். கண்ணனைக் காதலானகவும், காதலியாகவும், சேவகனாகவும், பிள்ளையாகவும், ஆயர்குல மக்களை காக்க வந்தவனாகவும் பாவித்து பாடிய பாடல்களுக்கு ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய நாயக, நாயகி மனோபாவப்பாடல்கள்

பாரதிக்கு அடிப்படையாக அமைந்திருந்தாலும் அவற்றை மிஞ்சும் வண்ணம் உணர்ச்சி மிகுந்த பாடல்கள் பலவற்றை வடித்துள்ளார். இருப்பினும் கண்ணனை பாவித்து பாடிய இப்பாடல்கள் நாம் என்று படித்தாலும் மனதில் திகட்டாத இன்பத்தைத் தருவனகவாக உள்ளன.

**துணைநூற்பட்டியல்**

[1] பாரதியார் உலகக்கவி – பேரா.மு.அப்துல்கரீம், வானதிபதிப்பகம்.

[2] கவிதைகள், தொகுதி 3, பாரிநிலையம், சென்னை.

[3] பாரதிதாசன் கவிதைகள், மெர்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர்.

[4] ஏ.திருநாவுக்கரசு (ப.ஆ), பாரதியார் கட்டுரைகள், ப.3.1.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.